
# துடிப்பு



Vembadi Girls' High School
Library
ACC. No: Ma 120
CLASS No: 050
DATE: 2/2/2011

02 2000

துடிப்பின் வாசகர்களே,

உங்களை எமது இரண்டாவது துடிப்பு இதழுடன் சந்திப்பதில் பெரும் மகிழ்வு அடைகின்றோம்.

உங்கள் துடிப்பில் உங்களுக்காக, பல புதிய பகுதிகளை இணைத்துள்ளோம்.

அட்டைப்படத்தில் பிரசுரிக்கப்பட்ட படம் உங்கள் சிந்தனைக்கு விடப்பட்டுள்ளது. உங்கள் உள்ளங்களில் பிறக்கும் உணர்வுகளை கவிதையாக மாற்றுங்கள், அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் பிரசுரிக்கப்படும். மௌனமொழியாக படங்களைக்கூட நீங்கள் வரைந்து அனுப்பலாம்.

உங்கள் விவேகமான வினாக்களிற்கு விடையளிக்க, இங்கே கணனியார் காத்திருக்கின்றார். உங்கள் வினாக்களிற்காக இங்கே ஒருபக்கம் ஒதுக்கியுள்ளோம். வினாக்கணைகளை நீங்கள் தொடுத்துத்தான் பாருங்களேன்!

குறுக்கெழுத்துப் போட்டிக்கான விடைகளை அனுப்பும்போது தவறாமல் படிவத்தையும் நிரப்பி அதனுடன் அனுப்புக.

மேலும் உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.


யாவற்றையும் அனுப்ப தொடர்புகொள்ளவேண்டிய இடம்,

**"துடிப்பு"**
**இன்ரறக்ட் கழகம்**
**வேம்படி மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

Vembadi Girls' High School
Library
ACC. No: Ma 120
CLASS No: 050
DATE: 2/2/2011

# பொருளடக்கம்


- துடிப்பின் வாசகர்களே
- 2000ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழு
- 1999ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழு
- இன்ரறக்ட் கழக சேவையில்
- சேவையின் புனிதம், அன்னை தெரசா!!
- பாராட்டுகின்றோம்
- குறுக்கெழுத்துப்போட்டி
- கரையைத்தேடி
- இரசித்த கண்களும் (இ)ரணம் பட்ட உடலும்
- அங்கிகள் தொடர்பான விஞ்ஞான துணுக்குகள்
- Interact
- Florence Nightingale

## 2000ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழு

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | – | செல்வி த.குணசிங்கம் |
| தலைவர் | – | Int. பு.நந்தினி |
| உபதலைவர் | – | Int இ.இரஜந்தி |
| செயலாளர் | – | Int ச.சாமினி |
| உதவி செயலாளர் | – | Int பூ. கிருபாலினி |
| பொருளாளர் | – | Int க.மைதிலி |

**இயக்குனர்கள்:**

Int. வை.சுகந்தி
Int. அ.ம.டயானா சிபானி
Int. பு.பிரசாந்தி
Int. இ.சுஜித்தா

Vembadi Girls' High School
Library
ACC. No: .....................
CLASS No: .....................
DATE: .....................

**நூலாசிரியர்கள்:-**

Int. ச.சுஜிதா
Int. சி.சிவரஞ்சனி
Int. ம.கஜப்பிரியா
Int. இ.டாருணி



## 1999ம் ஆண்டிற்கான நிர்வாகக் குழு


| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | - | செல்வி த.குணசிங்கம் |
| | | திருமதி N.தவசீலன் |
| தலைவர் | - | Int ச.சிவானுஜா |
| உபதலைவர் | - | Int P.பிரவீனா |
| செயலாளர் | - | Int B.அபிராமி |
| உதவி செயலாளர் | - | Int அ.டயானாசியானி |
| பொருளாளர் | - | Int N.பத்மபிரியா |

**இயக்குனர்கள்:**

Int. க.மைதிலி
Int. சி.சிவரஞ்சினி
Int. இ.இரஜந்தி

**நூலாசிரியர்கள்:-**

Int. N.சிறிசாந்தினி
Int. தி.வாசுகி
Int. பு.நந்தினி



## இன்ரறக்ட் கழக சேவையில்.....

சேவை என்றும் மக்களுக்கென்றே,
தேடிப்போகின்றோம்!
மக்கள் நலனுக்காகவே - நாம்,
சேவை செய்கின்றோம்!
கால்வலிக்கும், மெய்வலிக்கும்,
சோரப்போவதில்லை!
எம் கடமைகளைச் செய்வதிலே,
உறுதியாக நிற்போம்!
இன்ரறக்ட் கழக சேவை,
மக்களுக்கென்றும் தேவை!
இன்னல்கள் வந்தபோதும்,
இணையில்லாச் சேவை செய்வோம்!
நண்பர்கள் பலர் சேர்வோம்!
இன்ரறக்ட் கழகத்தில் சேர்வோம்!
அகிலத்தில் அனைவருக்கும்,
அணிதிரண்டு சேவை செய்வோம்!
தனிமனிதன் என்றும்,
சமூக சேவை செய்து,
தரணிதன்னில் மக்கள் துயர்,
துடைத்து நிற்கவேண்டும்!
துன்பப்படுவோருக்கு,
நாளும் துணைநின்று,
வையத்தில் வாழ வழி
காட்டிநிற்கும் எம் கழகம்!
எல்லோருக்கும் பணிசெய்ய,
துணிந்து நிற்கும் கழகம்!

**ம.கஜப்பிரியா,**
2001 Bio 'B'

- 1968 இல் அமெரிக்காவில் முதலாவது றோட்ரக்ட் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது.

- 1505 – 02 – 23ம் திகதி அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ நகரில் போல்.பி.ஹரில் என்பவரால் முதலாவது றோட்டறிக் கழகம் நிறுவப்பட்டது.

- ROTARY + ACTION = ROTARACT
  INTERNATIONAL + ACTION = INTERACT

- றோட்டறி குடும்பத்தில் றோட்டறிக் கழகம் தவிர மேலுமிரு கிளை நிறுவனங்கள் உண்டு.

  (1) றோட்டரக் கழகம் (18 – 30 வயதுடையோர்)

  (2) இன்ரறக்ட் கழகம் (18 வயதுக்குக் கீழ்ப்பட்ட பாடசாலை மாணவர்கள்.)

நன்றி

Achchaani

# சேவையின் புனிதம் , அன்னை தெரேசா!!

தடுமாறுகிறது! - என்பேனா
துக்க மிகுதியால்.....
தாய்மையின் ஒரு மூச்சு,
இழந்த செய்தி கேட்டு,
தடுமாறுகிறது என் பேனா
துக்க மிகுதியால்!
அணையா விளக்கொன்று,
அணைந்துவிட்டது!
விடியா இருளொன்று,
படிந்து விட்டது.
எம்மையார், இருட்டறைக்குள்,
இறுகக் கட்டிப்போட்டது?

சோக முடிச்சது,
கேசமுடிச்சாய்,
மனதில் வீழ்ந்தது!
மனிதம் எங்கே,
மரித்துப் போனது!

அகிம்சைக் கரத்தால்,
அராஜகத்தை அகற்றி
கருணைக் கதிர்வீச்சால்,
கடும் போர்களை (க்)
கருக்கினாய்!
சேவையின்,
மொழிபெயர்ப்பால்,

சோபை இழந்த,
குயிலதனை,
சூட்சுமமாய் - ஒரு
சாவணைத்துப் போகையிலே
சரித்திரமே மரிக்குதம்மா!
சாமரைகள் கருகுதம்மா!

எம் உள்ளங்களில்,
உலவிவந்த இவ்,
அன்புத் தென்றலை
அள்ளிச்சென்ற புயலே,
உனக்கு இதயம்
இல்லையா?

அன்னையே. நீ
மரிக்கவில்லை - சற்று
மௌனித்திருக்கிறாய்!
உன் கல்லறையில்
பூத்திருக்கும்
றோஜாச் செடிகள் கூட
மறுக்கின்றன! - நீ
மறைந்துவிட்டாய்
என்பதனை!

**ஆக்கம்: சுஜீதா சக்திவேல்**
2001 B10~`A'

# பாராட்டுகின்றோம்

எமது கழகச் செயற்திட்டங்களில் ஒன்றான நவீல்ட் பாடசாலைக்கான நிதி சேகரிப்பிலும், அக்கினிப் பெருமூச்சுக்கான நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டு பெருமளவு நிதி சேகரித்து உதவிய **Int.** டாருணி இரவீந்திரராஜாவைப் பாராட்டுகின்றோம்.

1999-2000 இற்கான றோட்டறிக்கழகத்தில் விருதுகள் கிடைக்கப்பெற்றோர்

| | | |
|---|---|---|
| சிறந்த தலைவர் | : | **Int.** நந்தினி புவனேந்திரன் |
| சிறந்த செயலாளர் | : | **Int.** சாமினி சண்முகசுந்தரம் |
| சிறந்த கழக சேவை இயக்குனர் | : | **Int.** சுகந்தி வைரமுத்து |
| சிறந்த சமூகசேவை | : | **Int.** டாருணி இரவீந்திரராஜா |
| சிறந்த இன்ரறக்ட் அங்கத்தவர் | : | **Int.** இராஜநந்தி இராமச்சந்திரன் |
| சிறந்த கழக சஞ்சிகை ஆசிரியர் | : | **Int.** சிவரஞ்சினி சிவகுருநாதன். |

# குறுக்கெழுத்துப்போட்டி – 01

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

→ (1) உலகைக் கவர்ந்த பெண்களில் ஒருவர்.
(5) நினைவாலயத்தை இவ்வாறு கூறுவர்.
(10) காட்டில் வாழும் ஒரு விலங்கு.
(13) மனிதனால் மட்டுமே செய்யக்கூடிய செய்கை என்பதனால் குழம்பிப்போயுள்ளது.
(23) பல, வேறுபட்ட என்பதற்கு ஒத்த சொல்
(25) இன்று 'குடி' மக்கள் நாடுவது.
(33) அறிவு, விவேகம் ஒத்தசொல்

↓ (1) இது எழுதும் பழக்கம் நல்லது
(2) அரசியலுடன் சேர்த்துக்கூறுவது.
(5) தொலைவில்
(6) கூடாத 'வாதம்'
(15) அபாயத்தைக் குறிக்கும் நிறம்.
(25) இது கேட்க குழந்தைகளுக்கு ஆசை.

**நந்தினி புவனேந்திரன்**
2001Bio 'B'

இப் போட்டியில் நிர்வாக அங்கத்தவர் பங்குபற்றலாகாது. இதில் முதலிடம் பெற்றவருக்கு பரிசிலும் கூடுதலான, சரியான விடைகளை எழுதிய பத்துப்பேரின் பெயர்கள் துடிப்பில் வெளிவரும். இப்போட்டி விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இடம்.

நூலாசிரியர்–
இன்ரறக்ட் கழகம்
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்

பெயர் : ....................................................................

வகுப்பு : ....................................................................

பாடசாலை : ....................................................................

....................................................................

....................................................................

# கரையைத்தேடி...

"நாட்கள் நகர்கின்றன - உன்
நினைவுகளைச் சுமந்து கொண்டு,
தேடுகின்றன நிழல்கள்,
நிஜத்தை தொலைத்துவிட்டு"

மனதுக்கு மட்டும் கேட்கக்கூடியதாய், மீண்டும் மீண்டும் வாசித்தாள் சௌதாமினி. ஒவ்வொருமுறை உச்சரிக்கும்போதும், புதுப்புது அர்த்தங்களாய் ஆனந்த கீதங்களாய், இதயத்தை உடைத்து வெளிப்படத்துடிக்கும் உணர்வுக் குமிழ்கயாய் எவ்வளவோ கவிதைகளைப் படைத்திருக்கிறான். ஆதித்தன் எல்லாம் சௌதாமியின் மூச்சுக்காற்றுக்களால் மீட்டப்பட்ட வீணைத் தந்திகள்.

" தாமினி, இஞ்சை ஒருக்கா வாம்மா" முற்றத்தில் அம்மாவின் அனுங்கல் ஒலி கேட்க, டயறிக்குள், கவிதையை பத்திரப்படுத்திவிட்டு, புள்ளிமானாய் ஓடினாள்.

"என்னம்மா, எத்தினைமுறை சொல்லிறது. பாரம் தூக்க வேண்டாமென்று." மூச்சிரைக்க வந்த தாயைப் பார்த்துக் கத்திவிட்டு, விறகுக்கட்டைக்கு அருகில் வந்தாள். ஒவ்வொன்றாய் எடுத்து சாக்கொன்றில் குறுக்குமறுக்காக அடுக்கியவள், அதை இரு கைகளாலும் அணைத்து, சுமந்தபடி குசினிக்குள் சென்று சுவரோரமாய் கொட்டினாள்.

எளிய சமயலறை. ஒருபுறம் அடுக்கடுக்காய் மூன்று தட்டுக்கள். அதில் முதலாவதில் மல்லி, மிளகு போன்ற சரக்குச் சாமன்களும், அடுத்த தட்டில் பாத்திரங்களும்

இடம்பிடித்திருந்தன. ஒருவர் நின்று சமைக்க போதுமான இடமும். இருவர் அமர்ந்து உண்ணப்போதுமான இடமும் இருந்தது. தூசு துணிக்கைகளற்று, நிமிர்ந்து நின்றது. புகைக்கூண்டு. எளிய சமையலறை எந்நேரமும் துப்புரவாக இருக்குமாறு தாமினி பார்த்துக்கொள்வாள்

வீடென்றால் மிகவும் எளிமையானதுதான். இரண்டு சிறிய அறைகளும் முன்னால் சிறய வரவேற்பு இடம் அது நான்கு கதிரைகளைக் அடைத்துக்கொண்டிருந்தது.

வாசலில் சைக்கிள் விடுகிற சத்தம் உரத்துச் சிரிக்கும் சத்தம் எல்லாம் ஒருமித்து காதுகளை அடைக்கவும். தாமினி சமையலறைக்குள் நுழைந்து எதையோ, செய்வதைப்போல் பாசாங்கித்தாள். “என்ன ரோட்டை வாய் பாக்கிறது” என்று அண்ணன் நேற்று தன் எரிச்சலைக் கொட்டியதிலிருந்து அவளுக்கு சற்றுப்பயம் உள்ளூற ஏறியிருந்தது.

“தாமினி ரீ ரெடியா?” சேட்டைக் கழற்றியபடி உள்ளே நுழைந்தான். வாசலில் சைக்கிள் தனியாய் நின்றது. ரயர்கள் தேய்ந்து வழுக்கையாகிவிட்டிருந்தன. தூசுமண்டலத்திற்கு போய் வந்த ஒரு ‘ரொக்கட்டின் நிலையாய்ப்பட, ‘பக்’கென்று அவள் சிரித்தும் விட்டாள்.

கொதித்துக்கொண்டிருந்த நீரை ஒரு கப்புக்களவாய் வார்த்து, தேயிலையும், சீனியும் அளவாய்ப்போட்டு சாயத்தை வடித்துவிட்டு கொண்டுபோய் அண்ணனின் கைகளில் நீட்டினாள்.

படித்துவிட்டு வேலைதேடும் பட்டதாரிகளில், அவனும் ஒருவன். பெயருக்குப்பின்னால் பீ.ஏ என்ற அடைமொழி

நீண்டிருந்ததேயொழிய, சொந்த உழைப்பு இல்லையென்று, அம்மாவின் நச்சரிப்புக்களையும் தாங்கவேண்டியிருந்தது.

"லொக்கு லொக்கு" என்று வாசலில் அம்மா இருமிக்கொண்டிருந்தாள். அவளுக்கும் சற்று சூடாக கோப்பி போட்டுக் கொடுத்து அருந்த வைத்தாள். வெள்ளிக்கிழமை யாதலால், இரவுக்கு பாண் வாங்கிக்கொண்டு அண்ணன் வந்திருந்தான். இரவுச் சுமை சற்று குறைந்ததை நினைத்து, மனம் சந்தோசக் கோலங்கள் போட்டது. சுவாமி அறை விளக்கை ஏற்றி சஷ்டி கவசம் இசைக்கத் தொடங்கினாள்.

"சஷ்டியை நோக்கி" என்று தொடங்கி, சண்முகா சரணம்" என்று உருப்போட்டு முடியும்வரை மனதை ஒருமுகப்படுத்துவதே பெரிய, தொல்லையாக இருந்தது. கண்கள் பிதுங்க அம்மா, பரிதாப முகத்துடன் அண்ணா, இருவருடத்தொலைப்பில்காலனுடன் கரைந்து போய்விட்ட அப்பா, கனடாவில் ஐந்து வருடங்கள் முன்பு திருமணம் செய்து ஒரு கடிதம் கூட போடாத அக்கா, கோப முகத்துடன் அத்தான். இத்தனைக்கும் மேலாக, எந்நேரமும் சிரித்த முகத்துடன் ஆதித்தன். அதாவது , எதிர்காலத்தில் அவள் கணவனாய் வரப்போகின்றவன். தற்போதைய காதலன். இத்தனை முகங்களும் மனதில் திரைக்காட்சியாய்விழ, ஒருவாறு வள்ளி , தெய்வானையுடன் நிற்கும் ஆறுமுக சாமியை நினைத்து கவசத்துக்கு முற்று வைத்துவிட்டாள்.

பதினோராம் வகுப்பில் ஒன்றாகப் படித்தபோது அரும்பிய காதல், இன்று இருவரின் உள்ளத்திலும் ஒரு புதுப்பூவாய் மலர்ந்திருக்கிறது. ஓ.எல் தாண்டி, ஏ.எல் என்ற புதிய அத்தியாயத்திற்குள் கலைப்பிரிவினூடாக காலடி எடுத்துவைத்தனர் இருவரும். பல்கலைக்கழகம் இவர்களின் பெறுபேறு போதாதென்று கையை விரித்துவிட்டது. தாமினி,

குடும்ப வேலைகளை பார்த்துக்கொள்ள ஆதித்தனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காக அவன் பெற்றோர் ஓடித்திரிந்தார்கள்.

"தாமினி இன்னும் ஒரு மாதத்தில் உன்னைவிட்டு பிரியிறதை எண்ணிப்பார்க்க என்னால முடியுதில்லை. நீ எப்படி இதைத் தாங்குவாய்?" அழுகையாய்க் கூறினான்.

"நீங்க எங்க போனாலும், உங்கட நினைப்பு என்னை விட்டு போகுமா? வீணா ஏன் கவலைப்படுறீங்கள்? ரெலி போனில் நாங்கள் எப்பவும் கதைச்சுக்கொண்டு இருப்பமே." என்று ஒருவாறு தேற்ற முயன்றாள். என்றாலும் உள்ளத் திரையை மறைக்கமுடியுமா? உள்ளம் அழுதது. கண்களி லிருந்து சொட் டுச்சொட்டாய் கண்ணீராய் வீழ்ந்து கன்னங் களை ஈரமக்கியது. கண்களை கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள்.

"தாமினி, என்னோட நெடுகலும் கதைச்சுக் கொண்டிருப்பாயா,? உன்னோட குரல் கேட்காம , எனக்கு நித்திரையும் வராது." உண்மையில் அவன் மிகவும் உலர்ந்து தான் போய்விட்டான். கண்கள் சிவந்திருந்தன. இரவிரவாய் அழுததை இமைகள் வீங்கிப்பருத்து வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. தாமி விக்க விக்க அழுதாள் அன்றைய நாள் மிகவும் துக்கமாய் இருந்தது.

நான்குமாதங்கள் ஓடிவிட்டன. என்றாலும் தாமியின் உணர்வுகளில் நிறைய மாற்றங்கள் வேரூன்றி இருந்தன. போன புதிதில் வந்த ஒரேயொரு கடிதத்தின் பின், அவனிட மிருந்து எந்தத் தகவலும் வரவில்லை மீண்டும் இரண்டு மாதங்களின் துக்க அர்ப்பணிப்பின் பின் ஒரு கடிதம். மகிழ் வாய் குதித்து, வாங்கினாள். அறைக்கு ஓடிச்சென்று பிரித்துப் படித்தாள்.

அன்பின் தாமினிக்கு,

நான் நலம். நீயும் நலமாய் இருப்பாய் என்று நம்புகிறேன். உனக்கு மாப்பிள்ளை பார்ப்பதாய், கேள்விப் பட்டேன். வேறு விஷேடமொன்றுமில்லை.

***ஆதித்தன்.***

இக்கடிதம் வந்ததின்மேல் வராமல் விட்டிருக்காலாமே என்று சௌதாமினிக்குப் பட்டது. "என்னனென்னவெல்லாம் குழைந்து குழைந்து எழுதுவானென்று எதிர்பார்த்திருந்த தாமினிக்கு இது பேரிடியாக வந்திறங்கியது. பதில் எழுதுவதற்கு உடனேயே பேனாவும், கையுமாக அமர்ந்துவிட்டாள்.

ஆதித்தனுக்கு,

நீங்கள் என்னை மறந்து விட்டீர்களா? நான் எங்கும் திருமணம் செய்யப்போவதில்லை. நீங்கள் எப்போது என்னை உவ்விடம் கூப்பிடப்போகிறீர்கள்? உங்கள் கரம் சேர ஆவலாய் இருக்கிறேன்.

***அன்புடன்,***
***தாமினி.***

**பதிலுக்கு ஆவேசமாய் வந்தது ஆதித்தனின் கடிதம்.**

"நீ இன்னும் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அந்த அறியாத வயதில் நாம் ஒருவரையொருவர் நேசித்தது உண்மைதான். அதற்காக உன்னை திருமணம் செய்வதா? அந்த நினைவுகளை உடனடியாக அறுத்துக்கொள். எனக்கு பத்துலட்சம் சீதனத்துடன் பெண் பார்த்து இருக்கிறார்கள். அனுப்பவும் போகிறார்கள். உன்னிடம் அவ்வளவு தர லாயக்கு இருக்கிறதா? வீண் கற்பனைகளை வளர்க்காமல், பெற்றோர் பார்க்கும் பையனைக் கட்டிக்கொண்டு

சந்தோஷமாய் வாழ். நான் எழுதிய கவிதைகளையும், கடிதங்களையும் உன் இதயத்திலிருந்து தூக்கி எறிந்துவிடு. இதுதான் நான் உன்னிடமிருந்து எதிர்பார்ப்பது."

***ஆதித்தன்.***

சுக்குநூறாய் கிழித்தெறிந்தும் ஆத்திரம் அடங்காமல் இதழ்கள் துடித்தன. "என்ன திமிர். என்ன ஆதங்கம், ஆண்கள் எல்லாம் இப்படிப்பட்டவர்களா? சந்தர்ப்பவாதிகள், எவ்வளவு அன்பு ஒழுக ஒழுக பின்னால் சுற்றிச்சுற்றி வந்நான், கெட்டவன், அவனுக்கு காதலென்றால் வேடிக்கை, என் இதயத்தை, உயிரைக் கொன்றுவிட்டு, நீ எங்கேயும் சென்று, நிம்மதியாய் வாழப்போவதில்லை" பெண்ணுள்ளம் துக்கமிகுதியால் சபித்தது. இருகைகளாலும் முகத்தைப் பொத்திக்கொண்டு விக்கிவிக்கி அழுதாள். கண்ணீர் வற்றுமா? அதுதான் நிறைந்திருக்கும் செல்வம் ஆயிற்றே.

"என்ன செல்லம் கண்ணெல்லாம் சிவந்து கிடக்கு, இரவு நித்திரை கொள்ளேல்லையோ? தாய் அந்த வயதிலும் தன்கூசிப்போன விழிகளால் ஊன்றிக் கவனித்து விட்டாள் என்பதனை நினைக்க வெட்கமாய் இருந்தது. "ஓமம்மா" என்று மெதுவாக நழுவிக்கொண்டாள். தன் துயரத்தை தாயுடன் கூட பகிர்ந்துகொள்ள அவள் விரும்பவில்லை.

அண்ணன் நெடுநேரமாய் அறைக்குள் ஏதோ தேடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, "என்ன அண்ணை தேடுறீங்கள்" என்று கேட்டாள். "ஒண்டுமில்லை ஏதோ லெற்றர் வந்து. மேசையில் வைச்சதெண்டு அம்மா சொன்னவா, அதுதான் தேடுறன்" என்றான்.

“ஓ அதுவா, அது எனக்கு வந்த லெற்றர். கொழும்பில இருந்து செல்வி போட்டவா, அதுதான்” தட்டுத்தடுமாறி அவ்விடயத்திற்கு, ஒருவாறு முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்.

அண்ணன் அவ்விடயத்தை விட்டு, அகலுமுன் “அண்ணா ஒன்று கேட்பன், செய்வியா?” என்று பீடிகையோடு தொடங்கினாள். என்னம்மா, சொல்லு” என்று அமைதியாய் கேட்டான் அவன். “அண்ணா நேற்று நீங்கள் சொன்னஆள்” கூறிமுடிக்கமுன் அண்ணன் குறுக்கிட்டு, “ஓ, அந்த வலது குறைந்த மாப்பிள்ளை......ஏன்? அவனுக்கென்ன?” ஏதுமறியாமல் கேட்டான்.

“நான் அவரை கலியாணம் செய்ய விரும்பிறன்” வார்த்தைகள் உறுதியாய் வெளிப்பட்டன. “என்னவிசர்க்கதை சொல்லிறாய், சீதனம் இல்ல, பணக்கார குடும்பமெண்டு அந்த முடவனுக்கு உன்னை கட்டிக்கொடுத்ததெண்டு, ஊர்ச்சனங்களிடம் எங்களை ஏச்சுவாங்கச் செய்யப்போறியே! ஆவேசமாய் கத்தினான்.

“இல்லையண்ணை உங்களுக்கு ஒருகெட்ட பெயரும் இல்லை. நான் முழுவிருப்பத்தோடதான் சொல்லிறன். அவருக்கு ஒருகால்தான் ஊனமொழிய, மனம் ஊனமில் லையே, மனம் ஊனமான எத்தனையோ ஆண்களுக்கு முன்னால், இவ்ர குறை பெரிதில்லை. தயவுசெய்து இதுக்கு மறுப்பு சொல்லாதே ‘ஓம்’ எண்டு சொல்லு” விம்மினாள். கண்ணீர் பெருகி கன்னங்களில் கோலமிட்டது.

அணைத்து உச்சிமோந்தவன், “உனக்கு பிடிச்சி தெண்டால் எங்களுக்கென்னம்மா, உன்னுடைய சந்தோசம் தான் எங்களுக்கும் சந்தோசம், நீ தைரியமாக இரு. எல்லாம் நான் நடத்திவைக்கிறன்” உறுதியாய் கூறிவிட்டு, அண்ணன்

அவ்விடத்தை விட்டகன்றான்.

எங்கேயோர் மூலையில் ஒளிந்துகிடந்த டயறியை எடுத்தாள். தூசு தட்டினாள். பேனா விரல்களில் உருண்டது.

"வரட்டுப் பாலைவனமென்று என்னை
வர்ணித்திருக்கும் வஞ்சகனே! - நீ
மறந்துவிடுவாய் என்னை - ஆனால் நான்
மறந்துவிடப்போவதில்லை உன்னை!
பாலைவனங்களில கூட பால்நிலவு வருவதுண்டு - அது
என்வாழ்விலும் வரப்போகிறது - ஒருநாள்
நான் வசந்தத் தென்றலாய் உலவுகின்றபோது - நீ
வரட்டுச் சூறாவளியாய் வரத்தான் போகிறாய்!
ஆனால் இனி எந்த ஜென்மத்திலும்,
என்னிடமிருந்து சூறையாட முடியாது
உன்னால் என் இதயத்தை!

விரல்களோடு சேர்த்து விழிகளும் கண்ணீரால் கவியெழதொடங்க, தாள்கள் நனைகின்றன. இன்னொரு வசந்தத்திற்காய், டயறியை மூடி பழைய இடத்தில் ஒளித்து வைத்த கைகள் கண்களை துடைத்துக்கொள்கின்றன.

**சுஜிதா சக்திவேல்**
**2001 உயிரியல்.**



## இரசித்த கணங்களும் (இ) ரணம் பட்ட உடலும்

சொந்த இடம் பிரிந்து தொலைதூரம் அலைந்து,
மீள நான் ஊர் புகுந்த போது..........
கடலோரச் சொரிமணலில் காலார நான் நடக்க,
அலையில் நனையாத தூரத்தில் கரையோரம் -
- நீயிருந்தாய்!
நீ எனக்கெந்த உறவுமில்லை! என்றுமே பார்த்ததில்லை!
ஆனாலும் என்னைக் கவர்ந்தாய்!
மெல்ல அடியெடுத்து, உன்னருகே நான் அமர்ந்து,
விரல்களால் வருட. .......... அப்போதும் ..... நீ
சீறவில்லை, சிணுங்கவில்லை, உன்னிடத்தில்......
ஆர்வம் அதிகரிக்க, உன்னை முழுமையாகப்
பார்த்துவிடும் ஆசைக்கிளர்ச்சி வர ...........
கரையோரம் நான் அமர்ந்து உன்னைப்பார்த்திருக்க,
தடையேதும் வரக்கூடும்! - தனிமையிலே
உன்னைநான் முழுமையாகப் பார்ப்பதே
உசிதம் என நினைத்து
கைகொடுத்து உனைத்தூக்க .......................
நீயும் என் அங்கங்களும் சிதறிய கணப்பொழுதில்தான்
மூளையில் உன்பெயர் பளிச்சிட்டது-
"மிதிவெடி" என்று....

பவானி. V
2001 Bio"B"

# அங்கிகள் தொடர்பான விஞ்ஞானத் துணுக்குகள்



*மனிதனால் அழிக்கப்பட்ட பறவை இனங்கள்
Auk(1844ல்), Dodo(1680ல்), Passengerpigeon(1014ல்)

*மனிதனால் அழிக்கப்பட்ட பாலூட்டி இனம்
Mammoths

*பறவைகளினதும், பாலூட்டிகளினதும் இயல்பை ஒத்த உயிர்ச்சுவட்டு பறவை
Archaeoteryx

*பாலூட்டிகளை ஒத்த பாலூட்டிகளின் மூதாதையான நகருயிர்
Therapoid

* வாழும் உயிர்ச்சுவடுகளான இனங்கள் சில:

Lingula - தம்பலகாமம் குடாவில் உண்டு.
Limuius -(இராச நண்டு, குதிரைலாட நண்டு)
Ichthyophis - கண்டி வாவியில் உண்டு.

* முள்ளந்தண்டு அற்றவையில் மிக விரைவாக நீந்தக்கூடிய இனங்கள்.
கணவாய் இனங்கள்.

* உலகில் அதிக எண்ணிக்கையான இனங்களை உடைய விலங்குக்கூட்டம்.
பூச்சிகள்.

* **தற்போது அழியும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள இனங்கள்**

நீலத்திமிங்கிலம், கடலாமை, இராட்சத பண்டா, துருவக்கரடி, Floridamannatees சிறுத்தை,Cheetan சிறுத்தை.

* **நீந்தக்கூடியவை**

பென்குயின்.

* **பறவைகளின் இயல்பைக்காட்டும் பாலூட்டி**

தாரா அலகு பிளற்றிப்பஸ்.

* **உலகின் பாரிய அழிவுகளிற்கு உட்பட்ட இனங்கள்.**

Dinosaurs, Trilobites, Ammonites.

***சிவரஞ்சனி சிவகுருநாதன்***
2001 Bio 'B'

வாழ்க்கை ஒரு மென்மையான பூ. அதை உலராமல் காப்பதும் கசக்கி எறிவதும் உன்னைப் பொறுத்தது.

ஒவ்வொரு புதுச்சூரியன் உதிக்கும் போதும் உன் களங்கமான பழைய ஆடையை கழற்றிவிட்டு புது ஆடை போட்டுக்கொள்.

# INTERACT



*What is 'Interact'?*

*It is a service club for students or young people, ages 1418. Interact stands for International Action.*

*The first club was established in Melbourne, Florida, USA in 1962. Today it is a thriving organization with some 150,000 members in more than 7.000 clubs in 93 countries.*

*What is the purpose of Interact?*

*To provide young people the opportunity to work together in a world. Fellowship dedicated to service and International Understanding.*

*Who compose it?*

*Membership is open to both males and females in any of the four years of school immediately preceding the University level. The club may be either school based or community based.*

*What does Interact Club do?*

*Interact club activities and projects are initiated and carried out by the club members themselves. Led by*

their elected officers, each club deterroines its own programmes and projects.

Interact develop and carry out a wide range of service projects from raising impressive sums of money for worthy causes to working directly with disabled children, the elderly and others in the community who need help. Each club carries out at least two service projects a year. One serves the school or community and the other furthers international understanding. Interactors also assist their sponsoring Rotary Club on various community service projects to make life better in the community.

Sponsoing Club

Every Interact club must be sponsored by a Rotary club which is also responsible providing guidance on a continuing basis. A successful Interact club depends, in part, on the active participation and support of its Rotarian sponsors.

In Sri Lanka more than 70 Interact clubs have been organized. The Rotary club of Jaffna sponsors 15 Interact clubs in Jaffna.

# FLORENCE NIGHTINGALE
## "THE LADY WITH THE LAMP"

She was born on 12 May 1820 in Florence in Italy. She was the second daughter of Mr & Mrs. Edward Nightingale. Her parents were quite wealthy and spent a great deal of time, travelling abroad. She was born when they were in Florence. It was this reason that they decided to name her 'Florence'. Soon after her birth the family returned to England.

Florence never went to school. She was taught by her father and a Lady tutor. She was a very keen pupil. She learned to read and understand many other Languages, which included German, French, Greek, Italian and Latin. As she grew older her paraents noticed that she was very different from her sisters and other young women.

One of the things that upset florence that suffering of the sick and poor. She wanted to devote herself to these people.

Hospitals in those days were filthy. Only the poor went to hospitals. There was always shortage of medical supplies in the hospitals. The doctors were over worked and there were no trained nurses. Florence wanted to work in a hospital. When she mentioned these to her parents, they work horrified. These days young women from good families never go to work in a hospital.

She kept very much to herself and spent all her freetime either reading or thinking. She never enjoyed parties or clothes.

Vembadi Girls' High School
Library
ACC. ... ma 120
CLASS No: 050
DATE: 2/2/2011

ANANTHAN COMPUTER PRINTING
*No: 42, Brown Road, Neeraviady,*
*Jaffna.*